*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*An international, peer-reviewed monthly academic research journal*
**ISSN: 3049-0723 (Online)**
**3107-7781 (Print)**

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Monthly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 Multidisciplinary International

Issue DOI: https://doi.org/10.63300/tm12032026

**Vol. 12 No. 03 (2026): August 2026**, **p221-227** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper*

# திருக்குறளும் சமகால அரசியல் நெறிமுறைகளும்

## Thirukkural and Contemporary Political Ethics

**பெ. சண்முகவடிவேல்,**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-600005..

**P. Shanmugavadivel*,**
*Ph.D. Research Scholar, Sangappalagai for Tamil Development,*
*University of Madras, Chennai - 600005..*
*Email: shanmugavadivel2000@gmail.com ORCID: https://orcid.org/0009-0001-7698-5964*

*Article history*
Received: 20-07-2026
Revised: 25-07-2026
Accepted: 01-08-2026

*Corresponding Author Email:
*shanmugavadivel2000@gmail.com*

**Abstract:** The Thirukkural stands as a universal code of conduct encompassing all aspects of human life. Within its three sections-Virtue, Wealth, and Pleasure—the concepts found in the 'Wealth' section (covering politics, governance, administration, civil affairs, justice, warfare, economics, friendship, enmity, and the welfare of the citizenry) remain relevant to contemporary political administration. In modern democracy, principles such as transparency, accountability, corruption-free administration, human rights, social justice, and good governance hold significant importance. The central theme of this study is that the Thirukkural emphasized many of these political norms two thousand years ago.

This article presents guidelines for good governance by comparing the political thoughts found in the Thirukkural with contemporary political principles. It explains how aspects such as the qualities of a ruler, the qualifications of ministers, the judicial system, the welfare of citizens, state responsibilities, war and peace, taxation, ethical leadership, and the eradication of corruption relate to the fundamental principles of modern political administration. Furthermore, it highlights the enduring relevance of Thiruvalluvar's perspective that political power should be a responsibility to ensure the welfare of the people, rather than an instrument of domination.

This study not only reveals the connection between classical Tamil thought and modern political science but also serves as an effort to re-examine the universal political vision of the Thirukkural..

**Keywords:** *Thirukkural, Thiruvalluvar, Political Ethics, Ministry, King, Good Governance, Morality, Social Justice, Democracy.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச்சுருக்கம்**

மனித வாழ்வின் ஒட்டுமொத்த நெறிகளையும் உள்ளடக்கிய உலகின் பொது நூலாகத் திருக்குறள் விளங்குகின்றது. அதன் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பகுதிகளுள் பொருட்பாலில் இடம்பெறும் அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல் மற்றும் குடியியலில் ஆகிய ஏழு இயல்களில் உள்ள கருத்துகள் இன்றைய அரசியல் நிர்வாகத்திற்கும் பொருந்தக்கூடியவை. நவீன மக்களாட்சி முறையில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு, ஊழலற்ற நிர்வாகம், மனித உரிமைகள், சமூகநீதி மற்றும் நல்லாட்சிக் கோட்பாடுகள் போன்றவை முக்கியத்துவம் பெறுகின்றன. இத்தகைய அரசியல் நெறிமுறைகள் பலவற்றைத் திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வலியுறுத்தியுள்ளது என்பது இவ்வாய்வின் மையக் கருத்தாகும்.

இவ்வாய்வு திருக்குறளில் இடம்பெறும் அரசியல் சிந்தனைகளையும், சமகால அரசியல் நெறிமுறைகளையும் ஒப்பாய்வு செய்து, நல்லாட்சிக்கான வழிகாட்டுதல்களை வெளிப்படுத்துகின்றது. குறிப்பாக முதல்வரின் பண்புகள், அமைச்சர்களின் தகுதிகள், நீதிமுறை, குடிமக்கள் நலம், அரசின் பொறுப்புகள், போர் மற்றும் அமைதி, வரிவிதிப்பு, ஒழுக்கமான தலைமை மற்றும் ஊழல் ஒழிப்பு போன்ற கூறுகள் சமகால அரசியல் நிர்வாகத்தின் அடிப்படை நெறிகளோடு எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பதை விளக்குகிறது. மேலும், அரசியல் அதிகாரம் என்பது ஆதிக்கக் கருவியாக இல்லாமல், மக்களின் நலக் கருவியாக இருக்க வேண்டும் என்ற திருவள்ளுவரின் பார்வை இன்றும் காலப்பொருத்தம் வாய்ந்ததாக இருப்பதை எடுத்துக்காட்டுகிறது. ஆகவே, தமிழ்ச் செவ்வியல் இலக்கியமான திருக்குறளின் சிந்தனைகளுக்கும் நவீன அரசியல் அறிவியலுக்கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்துவதோடு, திருக்குறளின் உலகளாவிய அரசியல் பார்வையை மீளாய்வு செய்யும் முயற்சியாக அமைந்துள்ளது.

**முக்கியச் சொற்கள்:** திருக்குறள், திருவள்ளுவர், அரசியல் நெறிமுறைகள், அமைச்சு, அரசன், நல்லாட்சி, ஒழுக்கம், சமூகநீதி, ஜனநாயகம்.

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் உலகளாவிய சிந்தனைகளை உள்ளடக்கிய மிகச் சிறந்த அறநூலாகத் திருக்குறள் திகழ்கிறது. இனம், மொழி, மதம், காலம் போன்ற எல்லைகளைக் கடந்து மனித வாழ்வின் அடிப்படை நெறிகளை எடுத்துரைக்கும் இந்நூல், அரசியல் அறிவியலின் பல்வேறு கோட்பாடுகளையும் உள்ளடக்கியதாகவும் விளங்குகிறது. குறிப்பாகப் பொருட்பாலின் உள்ளடக்க அமைப்பையும் அதன் அரசியல் முக்கியத்துவத்தையும் திருவள்ளுவமாலை,

**"அரசியல் ஐயைந்து அமைச்சியல் ஈரைந்து**
**உருவல் அரண்இரண்டு ஒன்றுஒண்கூழ் - இருஇயல்**
**திண்படை நட்புப் பதினேழ்குடி பதின்மூன்று**
**எண்பொருள் ஏழாம் இவை."** **(திருவள்ளுவமாலை, 26)**

எனச் சுட்டிக்காட்டுகிறது. இதில் இடம்பெறும் அதிகாரங்கள் ஒரு நாட்டின் நிர்வாகம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கான முழுமையான அரசியல் தத்துவத்தை வழங்குகின்றன.

இன்றைய உலகில் அரசியல் என்பது வெறும் ஆட்சி அமைப்பாக இல்லாமல், மக்கள் நலன், வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு, மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி, ஊழலற்ற நிர்வாகம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பாலின சமத்துவம் மற்றும் சமூகநீதி போன்ற பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாக உள்ளது. இத்தகைய அரசியல் நெறிமுறைகளுக்கான ஆழமான வேர்கள் திருக்குறளில் உள்ளன

மு. வரதராசன் அவர்கள் “வீட்டு வாழ்க்கைக்கு அடிப்படையானது பொருள்நல்கும் நாட்டு வாழ்க்கை. அந்த நாடு வாழ்க்கைக்கு அடிப்படை அரசியல்” என்கிறார். ஆகையால், திருவள்ளுவர் அரசனின் தனிப்பட்ட ஒழுக்கத்தையும், அமைச்சர்களின் அறிவுத் திறனையும், குடிமக்களின் நலனையும், நீதியின் அவசியத்தையும், பொருளாதார வளத்தையும் ஒன்றோடொன்று இணைத்து விளக்குகிறார். அதனால் திருக்குறள் ஒரு அறநூலாக மட்டுமன்றி அரசியல் நிர்வாகத்திற்கான ஒழுக்கக் கையேடாகக் காலத்தைக் கடந்தும் விளங்குகிறது. இக்கட்டுரை, திருக்குறளில் இடம்பெறும் அரசியல் சிந்தனைகளை சமகால அரசியல் நெறிமுறைகளோடு ஒப்பிட்டு ஆராய்கின்றது.

**திருக்குறளில் அரசியல் சிந்தனையின் அடித்தளம்**

திருவள்ளுவர் மனித வாழ்வின் அறநெறிகளை மட்டுமன்றி, அரசியல், நிர்வாகம், பொருளாதாரம் மற்றும் சமூக ஒழுங்கு ஆகியவற்றிற்கான நிலையான சிந்தனைகளையும் வழங்கும் உலகப் பொதுமறையாகும். குறிப்பாகப் பொருட்பால் பகுதியில் இடம்பெறும் அரசியல் சார்ந்த அதிகாரங்கள், ஒரு நாட்டின் ஆட்சிமுறை அறநெறியை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. திருவள்ளுவரின் அரசியல் சிந்தனையின் மையக்கருத்து, **அறமே ஆட்சியின் அடித்தளம்** என்பதாகும். அரசின் உயர்ந்த நோக்கம் மக்களின் நலன், நீதி மற்றும் சமூக அமைதியை உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்பதே அவரது நிலைப்பாடாகும்.

சங்க இலக்கியங்களிலும் ஆட்சியாளரின் பண்பும் நாட்டின் வளமும் ஒன்றோடொன்று தொடர்புடையதாகக் கருதப்படுகின்றன. ஔவையார்,

**“எவ்வழி நல்லவர் ஆடுவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே”** **(புறநானூறு, 187)**

என்று குறிப்பிடுவதன் மூலம், நல்லாட்சி நிலவும் இடத்தில் சமூகமும் செழிப்புறும் என்பதை உணர்த்துகிறார். அதேபோன்று, மோசிகீரனார்

**“மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்”** **(புறநானூறு, 186)**

எனக் கூறி, அரசனின் பண்பே நாட்டின் உயிர்ப்புக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைகிறது என்பதை வலியுறுத்துகிறார். இவ்விரு சங்கச் சான்றுகளும் திருவள்ளுவரின் அரசியல் சிந்தனையுடன் கருத்தியல் ஒற்றுமையைக் கொண்டுள்ளன.

ஆகவே, அரசியல் அமைப்பில் தலைவன் உயர்ந்த பொறுப்பையும் அதிகாரத்தையும் வகிப்பவன் என்பதால், பொருட்பாலின் தொடக்கத்திலேயே 'இறைமாட்சி' என்னும் அதிகாரத்தை அமைத்து, சிறந்த ஆட்சியாளருக்குரிய பண்புகளைத் திருவள்ளுவர் விளக்குகிறார். திருக்குறளில் அரசன், அமைச்சர், படை, அரண், பொருள், குடிமக்கள் ஆகியவை அரசின் அத்தியாவசிய கூறுகளாகக் குறிப்பிடப்படுகின்றன. இவை தனித்தனியாக அல்லாமல், ஒன்றோடொன்று தொடர்புடைய நிர்வாகக் கூறுகளாகச் செயல்பட வேண்டும் என வள்ளுவர் வலியுறுத்துகிறார். இதனை,

**"படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு." (திருக்குறள், 381)**

என்ற குறளில் ஒரு நாட்டின் வலிமை படை, குடிமக்கள், பொருளாதாரம், திறமையான அமைச்சு, நட்பு நாடுகள் மற்றும் பாதுகாப்பு அரண் ஆகிய ஆறு தூண்களின் மீது அமைகிறது என்று திருவள்ளுவர் எடுத்துரைக்கிறார். இது நவீன அரசியல் அறிவியலில் கூறப்படும் ஒருங்கிணைந்த ஆட்சிமுறை (Integrated Governance) என்ற கோட்பாட்டிற்கு ஒத்ததாகும்.

இதனால், திருக்குறளின் அரசியல் சிந்தனைகள் ஒரு குறிப்பிட்ட காலத்தின் அரசராட்சி முறைக்குள் மட்டுமே வரையறுக்கப்படாமல், அறநெறி, பொறுப்புணர்வு, நீதி மற்றும் மக்கள்நலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட அனைத்துக் காலங்களுக்கும் பொருந்தக்கூடிய அரசியல் தத்துவமாக விளங்குகின்றன. இவ்வகையில், சமகால மக்களாட்சியின் அடிப்படை விழுமியங்களை விளங்கிக் கொள்வதற்கும் மதிப்பிடுவதற்கும் திருக்குறள் ஒரு செவ்வியல் வழிகாட்டியாகத் திகழ்கிறது.

**திருக்குறளில் நல்லாட்சிக்கான நெறிமுறைகள்**

திருவள்ளுவர் முன்வைக்கும் அரசியல் சிந்தனையில் நல்லாட்சி என்பது அறநெறியை அடிப்படையாகக் கொண்ட மக்கள்நல ஆட்சியாகும். அரசியல் அதிகாரம் தனிநல நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படாமல், நீதி, நேர்மை, பொறுப்புணர்வு மற்றும் பொதுநலனை நிலைநிறுத்தும் கருவியாக அமைய வேண்டும் என்பதை பொருட்பால் பல அதிகாரங்கள் வழியாக வலியுறுத்துகிறது. நல்லாட்சிக்கான அடிப்படை, ஆட்சியாளரின் ஒழுக்கமும் அறவாழ்வும்தான் என்பதைக் திருவள்ளுவர் தெளிவுபடுத்துகிறார். இதனை,

**"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்." (திருக்குறள், 35)**

என்ற குறள் உணர்த்துகிறது. பொறாமை, பேராசை, சினம் மற்றும் கடுஞ்சொல் ஆகிய குற்றங்களைத் தவிர்ப்பதே அறமாகும் என வள்ளுவர் குறிப்பிடுகிறார். இவ்வகையான தன்னடக்கமும் ஒழுக்கமும் ஆட்சியாளரின் அடிப்படைப் பண்புகளாக அமைய வேண்டும் என்பதை இக்குறள் மறைமுகமாக வலியுறுத்துகிறது. அதேபோல்,

**"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா**
**மானம் உடைய தரசு." (திருக்குறள், 384)**

என்ற குறளில், அறநெறியிலிருந்து விலகாமல் அநீதியை அகற்றி, மானத்துடனும் துணிவுடனும் ஆட்சி செய்பவனே சிறந்த அரசன் எனத் திருவள்ளுவர் எடுத்துரைக்கிறார். இக்கருத்தின் மூலம், அரசியல் அதிகாரம் ஒழுக்கப் பொறுப்புடன் இணைந்திருக்க வேண்டும் என்பதும், மக்களின் நலனே ஆட்சியின் உயர்ந்த நோக்கமாக இருக்க வேண்டும் என்பதும் தெளிவாகிறது. திருவள்ளுவர் ஆட்சியை அறநெறி மற்றும் நீதியின் அடிப்படையில் விளக்கியுள்ளமை அவரது அரசியல் மற்றும் சட்டச் சிந்தனையின் ஆழத்தை வெளிப்படுத்துகிறது. இதனாலேயே டாக்டர் மு. இராசேந்திரன், திருவள்ளுவரை “சட்ட வல்லுநர்” என்று போற்றுகிறார்.

மேலும், நல்லாட்சி என்பது அரசனின் தனிப்பட்ட திறமையால் மட்டும் உருவாகாது. அது அறிவார்ந்த அமைச்சர்கள், நீதிசார்ந்த நிர்வாகம், நியாயமான வரிவிதிப்பு, மக்களின் குறைகளைக் கேட்டு தீர்க்கும் ஆட்சிமுறை மற்றும் சட்டத்தின் முன் சமத்துவம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பால் முழுமையடைகிறது. இத்தகைய சிந்தனைகள் இன்றைய நல்லாட்சி (Good Governance), பொறுப்புடைமை (Accountability), வெளிப்படைத்தன்மை (Transparency) மற்றும் சட்டத்தின் ஆட்சி (Rule of Law) ஆகிய கோட்பாடுகளுடன் கருத்தியல் ஒற்றுமையைக் கொண்டுள்ளன. ஆகவே, திருக்குறள் வலியுறுத்தும் நல்லாட்சிக் கொள்கைகள் காலந்தோறும் அரசியல் ஒழுக்கத்திற்கான நிலையான வழிகாட்டுதல்களாகத் திகழ்கின்றன.

**சமகால அரசியல் நெறிமுறைகளும் திருக்குறளின் பொருத்தப்பாடும்**

இன்றைய உலக அரசியலில் நல்லாட்சி, வெளிப்படைத் தன்மை, பொறுப்புடைமை, சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள், சமூகநீதி மற்றும் மக்கள் பங்கேற்பு ஆகியவை அரசியல் நெறிமுறைகளின் அடிப்படைக் கூறுகளாகக் கருதப்படுகின்றன. மக்களாட்சி முறையில் அரசின் செயல்பாடுகள் மக்களின் நலனை மையமாகக் கொண்டு அமைய வேண்டும் என்பதே சமகால அரசியல் சிந்தனையின் மையக் கருத்தாகும். இந்நிலையில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்ட திருக்குறளில் இடம்பெறும் அரசியல் சிந்தனைகள், இன்றைய ஆட்சி முறைகளுடனும் ஆச்சரியப்படத்தக்க வகையில் பொருந்துகின்றன.

திருவள்ளுவர், அரசாட்சியின் நிலைப்பேறானது அறம், நீதி மற்றும் மக்களின் நம்பிக்கை ஆகியவற்றின் மீது அமைகிறது என்பதை வலியுறுத்துகிறார். அரசன் அறிவுடையவர்களின் ஆலோசனையை ஏற்று, சூழ்நிலையை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்; குடிமக்களின் நலனைப் பாதுகாக்க வேண்டும்; சட்டம் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பன அவரது அரசியல் சிந்தனையின் முக்கியக் கூறுகளாகும். இதனை,

**“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவ மென்பது இழுக்கு.”** **(திருக்குறள், 467)**

என்ற குறள் தெளிவுபடுத்துகிறது. எந்தச் செயலும் அதன் விளைவுகளை ஆராய்ந்து திட்டமிட்டு மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற இக்கருத்து, இன்றைய கொள்கை வடிவமைப்பு (Policy

Formulation), நிர்வாகத் திட்டமிடல் (Strategic Planning) மற்றும் பொறுப்புணர்வுமிக்க ஆட்சி (Responsible Governance) ஆகியவற்றின் அடிப்படை நெறியுடன் ஒத்துப் போகின்றது.

அதேபோல், ஊழலற்ற நிர்வாகம், மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்தல், பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல், சமூகநீதியை நிலைநிறுத்தல் ஆகியவை நவீன அரசியல் நிர்வாகத்தின் முக்கிய நோக்கங்களாகும். இக்கொள்கைகளின் அடிப்படைச் சிந்தனைகள் திருக்குறளில் அறம், நீதி, நடுநிலைமை மற்றும் கடமையுணர்வு என்ற வடிவில் வலியுறுத்தப்பட்டுள்ளன. எனவே, திருக்குறள் ஒரு செவ்விலக்கியமாக மட்டுமன்றி, சமகால ஜனநாயக அரசியலுக்கான ஒழுக்க அடித்தளத்தையும் வழங்கும் காலமறியாத அரசியல் வழிகாட்டி நூலாகத் திகழ்கின்றது.

**சமகால அரசியலுக்கு வள்ளுவரின் வழிகாட்டுதல்கள்**

உலகமயமாக்கல், தொழில்நுட்ப வளர்ச்சி, தகவல் வெளிப்படைத்தன்மை மற்றும் மக்கள் விழிப்புணர்வு ஆகியவை அதிகரித்துள்ள இன்றைய அரசியல் சூழலில், ஒழுக்கமிக்க ஆட்சிக்கான தேவை மேலும் வலுப்பெற்றுள்ளது. இந்நிலையில், திருவள்ளுவர் முன்வைக்கும் அரசியல் நெறிமுறைகள் சமகால ஆட்சியாளர்களுக்கும் நிர்வாக அமைப்புகளுக்கும் நிலையான வழிகாட்டுதல்களாக அமைகின்றன. திருவள்ளுவர், ஆட்சியாளர் மக்களின் குறைகளை அறிந்து, உரிய நேரத்தில் தீர்வு வழங்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார். இதனை,

**“காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**

**மீக்கூறும் மன்னன் நிலம்.”** **(திருக்குறள், 386)**

என்ற குறளில் எளிதில் அணுகக்கூடியவனாகவும், இனிய சொற்களால் மக்களுடன் பழகுபவனாகவும் இருக்கும் அரசனின் ஆட்சி நிலைத்து வளரும் என்பதை இக்குறள் உணர்த்துகிறது. இதன் வழியாக மக்கள் பங்கேற்பு, பொதுமக்களிடம் பொறுப்புணர்வுடன் செயல்படுதல் மற்றும் குடிமக்கள் மைய நிர்வாகம் ஆகிய சமகால அரசியல் நெறிமுறைகளின் முக்கியத்துவம் வெளிப்படுகிறது.

மேலும், ஆட்சியில் நேர்மை, தன்னடக்கம், அறிவார்ந்த முடிவெடுத்தல், திறமையான நிர்வாகம் மற்றும் பொதுநலப் பொறுப்பு ஆகியவை அரசியல் தலைமைத்துவத்தின் அடிப்படைப் பண்புகளாகத் திருக்குறள் வலியுறுத்துகிறது. இத்தகைய சிந்தனைகள் ஊழல் தடுப்பு, சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைப் பாதுகாப்பு, சமூகநீதி மற்றும் நிலையான வளர்ச்சி போன்ற நவீன ஆட்சிக் கோட்பாடுகளுக்கு அறநெறி அடித்தளமாக அமைகின்றன. எனவே, திருக்குறள் காலத்தை வென்ற அறநூலாக மட்டுமன்றி, நல்லாட்சி, பொறுப்புணர்வு மற்றும் மனிதநேய அரசியலை உருவாக்குவதற்கான சிந்தனைப் பெட்டகமாகவும் திகழ்கிறது. அதன் அரசியல் நெறிமுறைகள் இன்றைய சமூக மற்றும் அரசியல் மாற்றங்களிலும் பொருத்தமுடையவையாக இருந்து, மக்களாட்சி நெறிகளை வலுப்படுத்தும் நிலையான வழிகாட்டுதல்களை வழங்குகின்றன.

**DOI: https://doi.org/10.63300/tm12032026.09**

**முடிவுரை**

திருக்குறள் அறநெறி சார்ந்த வாழ்வியல் நூலாக மட்டுமன்றி, காலத்தை வென்ற அரசியல் சிந்தனைகளையும் உள்ளடக்கிய சிறந்த இலக்கியமாக விளங்குகிறது. குறிப்பாகப் பொருட்பால் அறம், நீதி, மக்கள்நலம், பொறுப்புணர்வு மற்றும் திறன்மிக்க நிர்வாகம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஆட்சிமுறையை வலியுறுத்துகிறது. இவ்வாய்வின் மூலம், திருக்குறளில் இடம்பெறும் அரசியல் நெறிமுறைகள் சமகால அரசியல் விழுமியங்களான நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை ஆகியவற்றுடன் கருத்தியல் ஒற்றுமை கொண்டுள்ளன என்பது தெளிவாகின்றது.

அரசியல் அதிகாரம் மக்களின் நலனை நோக்கிய அறப்பொறுப்பாக அமைய வேண்டும் என்ற திருவள்ளுவரின் சிந்தனை, இன்றைய மக்களாட்சி ஆட்சிக்கும் பொருத்தமிக்க வழிகாட்டுதலாகத் திகழ்கிறது. எனவே, திருக்குறள் தமிழரின் செவ்வியல் இலக்கியமாக மட்டுமன்றி, சமகால அரசியல் நெறிமுறைகளை அறிந்து செயல்படுத்துவதற்கான நிலையான சிந்தனைக் கருவூலமாகவும் திகழ்கிறது.

**சான்றாதாரங்கள் (References)**

[1.] இளங்குமரன். இரா., புறநானூறு மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், 2022.

[2.] சந்தானராமன் (ப.ஆ), திருவள்ளுவமாலை, பூங்கொடிப் பதிப்பகம், சென்னை, 2010.

[3.] திருவள்ளுவர், திருக்குறள் - பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை, 2018.

[4.] ராஜேந்திரன். மு., சட்ட வல்லுநர் திருவள்லுவர்,அகநி வெளியீடு, சென்னை, 2011.

[5.] வரதராசன். மு., திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், பாரி நிலையம், சென்னை, 2009.